tamilguru.lk

G-2

**<u>G2 அறிவுறுத்தல்கள்- நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெற்றுள்ள பாடங்களுக்குரியதாக பட்டத்தின் பாடத் தொகுதியில் 1/3 பங்கு காணப்படுவதாக பல்கலைக்கழகப் பதிவாளரிடமிருந்து உறுதிப்படுத்தல் கடிதத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பான அறிவுறுத்தல்கள்.</u>**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரச பல்கலைக்கழகமொன்றின் மூலம் அல்லது பாராளுமன்றச் சட்டம் மூலம் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம்/ பட்டம் வழங்கும் நிறுவனமொன்றின் மூலம் பட்டத்தைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் இந்த அறிவித்தலுடன் இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள F1 படிவத்தைப் பதிவிறக்கம் செய்து, விண்ணப்பதாரரால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய I பகுதியை பூர்த்தி செய்து, தமது பட்டச் சான்றிதழின் மற்றும் விரிவான பெறுபேற்றுச் சான்றிதழின் பிரதியுடன் தாம் பட்டப் பாடநெறியைத் தொடர்ந்த பல்கலைக்கழகத்தின் பதிவாளரிடம் தாங்களோ அல்லது தங்களால் பெயர் குறிப்பிடப்படும் ஒருவரைக் கொண்டு சமர்ப்பிக்க வேண்டும்.

02. அத்தகைய பட்டச் சான்றிதழுக்கு அமைய பல்கலைக்கழகப் பதிவாளரால் வழங்கப்படும் பரிந்துரைகள் அடங்கிய பகுதி I மற்றும் பகுதி II என்பன பூர்த்தி செய்யப்பட்ட F1 படிவத்தை, நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரரால் நேர்முகப் பரீட்சை சபையினரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

03. இதன் போது தாங்கள் விண்ணப்பித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய குறிப்பு 4 அல்லது குறிப்பு 6 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பட்டத்தின் பாடத் தொகுதியை (1/3) / தொடர்ந்திருப்பதாக உறுதிப்படுத்தல் அவசியமான பாடங்களுக்காக தாங்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெற்றுள்ளீர்களாயின், அத்தகைய அனைத்துப் பாடங்களுக்கும் தொடர்புடைய வகையில் ஒரேயொரு F1 படிவத்தின் மூலம் அந்தந்தப் பாடத்திற்குரிய பட்டத்தின் பாடத் தொகுதியினை/ தொடர்ந்திருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

04. அத்துடன் தங்களது இந்தப் பட்டத்தின் பாடத் தொகுதியை உறுதிப்படுத்தும் ஆவணத்தையும் தங்களுக்குரிய நேர்முகப் பரீட்சை நடைபெறும் நாளில் நேர்முகப் பரீட்சை சபையினரிடம் சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும். எனவே, நீங்கள் F1 படிவத்தைப் பூர்த்தி செய்து **<u>2026.10.20</u>** திகதிக்கு முன்னர் உரிய பல்கலைக்கழகப் பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

05. மேலும், அத்தகைய ஆவணங்களுக்கு அமைய பல்கலைக்கழகப் பதிவாளரின் பரிந்துரைகளை வழங்குவது தொடர்பில் ஏற்கனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் கண்காணிக்கப்படும் அரச பல்கலைக்கழகங்களும் இவ்வமைச்சின் உயர் கல்விப் பிரிவு / பாதுகாப்பு அமைச்சு என்பவற்றால் கண்காணிக்கப்படும் அரச மற்றும் அரசசார்பற்ற பல்கலைக்கழகங்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

06. அவ்வாறே, செய்முறை நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெறுவதற்கு, பொது நேர்முகப் பரீட்சை சபையினரிடம் பாடத்தொகுதி நிரூபிக்கப்படுவதற்கு அவசியமான பாடங்களுக்குரிய F1 படிவத்தை சமர்ப்பித்து குறித்த தேவையானது பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். **எனவே, நீங்கள் உரியவாறு 2026.10.20 திகதிக்கு முன்னர் பாடக் கட்டமைப்பை உறுதிப்படுத்தும் படிவத்தைச் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகப் பதிவாளரிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு இவ்வமைச்சு பொறுப்புக்கூறாது**.

07. மேலும், ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி பட்டப்படிப்பினை மேலே *01* ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தோ அல்லது நிறுவனத்திலிருந்தோ பெறாத சந்தர்ப்பங்களில், அவர்கள் தொடர்ந்துள்ள பட்டப்படிப்பின் பாடத்தொகுதியை நிரூபிப்பதற்காக பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்த இணையத்தள அறிவித்தல்கள் எதிர்வரும் காலப்பகுதியில் (*2026.10.15* முதல் *2026.10.30* வரை) இவ் அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். நீங்கள் அப் பிரிவின் கீழ்வரும் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பினைத் தொடர்ந்துள்ள ஒரு விண்ணப்பதாரியாயின், அவ்வுரைகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எனவே, அத்தகைய விண்ணப்பதாரிகள் இவ் *F1* படிவத்தைப் பூர்த்தி செய்வது அவசியமற்றதாகும்.

நாலக களுவெவ
செயலாளர்
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு